தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சஎ	திருவள்ளுவர் யாண்டு உயமச பிரமாதீச, மார்கழி (1973 — டிசம்பர் — 1974 — ஜனவரி)	மலர் சூ

கண்ணுடையர்

பேராசிரியர் கு. சிவமணி

அறங்கூறும் உலகப்பெரு நூல்களுள், திருக்குறளுக்கு ஒரு தனிப் பெருமை உண்டு. பிற நூல்கள், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவற்றையும் அறங்களாகத் தொகுத்து வைக்கின்றன. ஆனால் திருக்குறளோ, மனத்தை மையமாகக் கொண்டு, முயன்றால் செய்து முடிக்கக் கூடிய மனித எல்லைக்குட்பட்டவற்றையே அறங்களாக வரையறுத்துள்ளது. இலங்கு நூலாகிய திருக்குறள், தமிழ் மறையாக விளங்குவதுடன், தமிழர் தம் இனவழிவரும் சொத்தாகவும் போற்றப்பெறுகின்றது. அத் தமிழ் மறையை இதயங்கொண்டு கற்பார் ''அறிதோறும் அறியாமை'' கண்டு செறிவான உரை நலத்தைக் காலங்கள் தோறும் அளித்தல் கண்கூடு. மரபு வழிவரும் பழைமையையும் பற்றிக்கொண்டு, பூத்துவரும் புதுமையையும் தழுவிக்கொண்டு பொலியும் தமிழ் மறையின் தனிப்பாங்கு, புலமையாளரின் அறிவுக்கும் உணர்விற்கும் படைக்கப் பெறும் புத்தமுத விருந்தாகும். அத்தகைய விருந்தே இந்த ஆய்வுரையாகும்.

'உறுப்புக்களுள்ளே சிறந்தது எது?' என்னும் வினவே சிலர்க்குத் தவறானதாகத் தோன்றலாம். ஏனென்றால், எல்லா உறுப்புக்களும் ஒருவர்க்குத் தேவையானவையே. ஆகவே, 'எல்லாம் சிறந்தவை' என்றுதான் சொல்லத் தோன்றும். ஒருவர் வாழ்வதற்கு, உயிர்க்காற்று, உணவு, செல்வம் போன்ற பற்பல தேவைப் படினும், அடிப்படையானதாக உயிர்க்காற்றுத் தேவைப் படுகின்றது. ''தூங்கையிலே வாங்குகிற மூச்சு, சுழிமாறிப் போனாலும் போச்சு'' என்னும் பழம்பாடல், உயிர்க்

காற்றின் இன்றியமையாமையைப் புலப்படுத்தும். அதுபோன்றே, உறுப்புக்கள் எல்லாமே சிறப்புடையன என்றாலும், கண்ணே தலைமைச் சிறப்புடையதாகக் கருதப்பெறுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் மற்றொருவர் காலை அறியாமல் மிதித்து விட்டால் உடனே மிதியுண்டவர், மிதித்தவரைப் பார்த்து, "உமக்குக் கால் இருக்கின்றதா" என்பதற்கு மாறாகக் "கண் இருக்கின்றதா?" என்று கேட்பதைப் பார்க்கின்றோம். கால் செய்த தவறு கண் மீது விழுகின்றது. ஒருவர் மற்றொருவர்மீது மோதிக்கொண்டால், உடல்தானே மோதிற்று என்று நினைத்து உடல் இருக்கின்றதா என்று கேட்பதற்கு மாறாக, மோதுண்டவர், 'கண்ணிருக்கின்றதா' என்று வினவக் கேட்கின்றோம் உடலின் தவறு கண்மீது சுமத்தப் பெறுகின்றது. நல்லன அல்லாதவற்றை ஒருவர் பேசினால், 'உண்மைபேசு' என்பதற்குப் பதிலாகக் 'கண் தெரிந்து பேசு' என்று கூறக் கேட்கின்றோம் வாயின் தவறான செயல் கண்மேல் பழியாக விழுகிறது. செம்மையாக அடிவாங்கியவரைப் பார்த்த பிறர், "இப்படிக் கண் தெரியாமல் அடித்துவிட்டாரே" என்று பதைக்கின்றனர். கால் மிதித்தாலும், உடல் மோதினாலும், வாய் வைதாலும், கை அடித்தாலும், அவற்றைக் கண்ணோடு தொடர்பு படுத்திக் கூறுவதிலிருந்தும் கண்ணின் சிறப்புப் புலப்படும்.

சிற்பம் வடிக்கும் சிற்பிகள், சிலைகளை முடித்தபின், பின்புறமாய் நின்று கடைசியில் 'கண் திறத்தலையும்', ஓவியர்கள் தெய்வ உருவங்களை வரைந்தபின் இறுதியில் பக்கவாட்டிலே நின்று 'கண்ணெழுதுதலையும்' சிறப்பு நிகழ்ச்சியாகக் கொள்கின்றனர். திருவள்ளுவரின் காதல் தலைவி, தன் தலைவனைக் காதன்னகேளிர் என்றோ மூக்கன்ன கேளிர் என்றோ கூறாமல், 'கண்ணன்ன கேளிர்' என்று கண்ணையே உவமையாகக் கொள்கின்றாள். குழந்தைகளைக் 'கண்ணே' என்று கொஞ்சுவதே பெருவழக்கு. உருவெழுதும்போதும் ஒப்புக் கூறும்போதும் இவை போன்ற பிறவற்றிலும் கண்ணே தலைமையிடம் பெறுகின்றது.

கண்ணின் இயல்பே, அதுபெறும் சிறப்புக்குக் காரணமாகும். காலில் முள் தைத்து முனை முறிந்து துன்பம் தந்தால், காலில் தானே முள் குத்திற்று என்று கருதாமல், கால்படும் அவதிக்காகக் கண் கலங்குகின்றது. உடலிலுள்ள எந்தவோர் உறுப்பும் எவ்வகையிலாவது துயருற்றால், அத்துயரைத் தன் துயராகக் கருதிக் கண் கண்ணீர் வடித்து வருந்துகின்றது.

கண்ணில் சிறு தூசு விழுந்ததாகக் கொள்வோம். அதற்காகக் கண்தான் வருந்துமே தவிர. வேறு உறுப்புக்கள் வருந்தா. பிறவுறுப்புக்கள், தன் துன்பத்தில் பங்கு பெருத போதும், அவற்றிற்கு ஊறுநேர்ந்தால் கண்கலங்கி இரங்குகின்றது. பிறவற்றின் துன்பத்திற்காக இரங்குவதைப் போன்றே, அவற்றின் இன்பத்திலும் கண் பங்கு கொண்டு மகிழ்கின்றது. கையும் காலும், காதும் மூக்கும், கழுத்தும் சுமக்க முடியாத அளவுக்குப் பொன்னகை பூட்டிக் கொண்டாலோ, உடல் எடுப்பாக உடையணிந்தாலோ, அவ்வுறுப்புக்கள் மகிழ்வதில்லை. மாருக. அவற்றைக் கண்டு கண்டு கண் மகிழ்ந்து பூரிக்கின்றது; மகிழ்ச்சியின் வெளிப்பாடாகக் கடையில் நீர் தேக்குகின்றது அன்புடைய நெஞ்சக் கலப்பின் விளைவாகக் கண் கண்ணீரைப் புலப்படுத்துகின்றது. நன்ருக மனம் விட்டுக் கள்ளமின்றிச் சிரிக்கும் போதும் கூட மகிழ்ச்சியின் வெளிப்பாடாகக் கண் கண்ணீரைச் சிந்துகின்றது. ஆகவே, தனக்காகப் பிற இரங்கலோ மகிழலோ இல்லையென்ருலும், அவற்றின் துன்பத்தில் இரக்கமும், மகிழ்ச்சியில் இன்பமும் கொள்ளும் இயல்பு, உறுப்புக்களுள் கண் ஒன்றிற்கே உண்டு. ஆகவேதான் நான்மணிக்கடிகையும், "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்று கூறுகின்றது

நெஞ்சத்துள் நிகழும் நிகழ்ச்சியை வெளிப்படுத்துவது முகமாகும்.

> "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்"

என்று திருக்குறள் (706) கூறும். முகம் என்று பொதுவாகக் குறிப்பினும், முகத்திலுள்ள கண்ணுக்கே அகத்தினியல்பைக் குறிப்பால் உணர்த்தல் கூடும், குறிப்பினுள் குறிப்புணராவாயின் கண்களால் பயனில்லை என்றும், "பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்" (709) என்றும், 'அளக்குங்கோல் கண்ணல்லது இல்லை பிற' (710) என்றும் திருக்குறள் கண்ணின் சிறப்பைக் குறிக்கின்றது. கண்ணெடு கண்ணிணை நோக்கு ஒக்கும்போது வாய்ச் சொற்கள் பயனற்றுவிடுவதையும் (1100), மனத்துள் மறைக்கப்படுவதை ஊரார்க்குப் பறையறிவிக்கும் "அறைபறைகண்" உடைய தலைவியையும் (1180) திருக்குறள் காட்டுகின்றது. உள்ளத்து மகிழ்ச்சியைப் புன்முறுவலால் வெளிப்படுத்தாமல், கண்ணலும் முகத்தாலும் புலப்படுத்தும் தலைவியை,

> " முள் நுனை தோன்றாமை முறுவல் கொண் டடக்கித்தன்
> கண்ணினும் முகத்தினும் நகுபவள் "

என்று கலித்தொகை (142) கவினுறக் காட்டுகின்றது. கண்ணே. அகத்தினை முகத்தின்வழி உணர வைக்கின்றது. குறிப்பறிவுறுத்துகின்றது; பகைமையும் கேண்மையும் சுட்டு கின்றது; ஒருவரை அளக்குங் கோலாகவும் அமைகின்றது.

உறுப்புக்களுள் சிறந்தவை கண்களே! உயிர்க் குலத்தின் கண்கள் கல்வியே!

> " எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு "

என்று திருக்குறள் (392) விதித்துள்ளது. ' எண்ணும் எழுத் தும் ஆகிய இரு கலைகளும் வாழுகின்ற உயிர்க்குக் கண்கள் என்று சொல்லுவர் ' என்பது இக்குறளின் கருத்தாகும். உயிர் கட்குக் கண்களாக அமைந்து ஒளி தருவது இவ்விரு கலைகளி னுல் பெறப்படும் கல்வியே ஆகும். கல்வியைப் பெற்றிருத்தல் ஒன்றே ஒருவரைக் கற்றவராக்கிவிட முடியாது. நாலு வழி யிலும் தீய வழியிலே சுழலும் விழிகளைச் சிறந்தவை என்று கொள்ள முடியுமா? நல்லவற்றை நோக்கும் கண்களே நல்லவை அதுபோல், கல்வியின் விளைவுகள் நல்லவையாக அமைந்தால் ஒழிய ஒருவரைக் கற்றவர் என்று கருத முடியாது. பயனற்ற கல்வியைப் பெற்றிருப்பவர் பழுதுற்ற கண்களைப் பெற்றிருப் பவராவார். பழுதுற்ற கண்களால் அவற்றைப் பெற்றிருப் போருக்கும் பயனில்லை: பிறர்க்கும் பயனில்லை பயனில்லாத கல்வியால் அதைக் கற்றவர்க்கும் பயனில்லை; மற்றவர்க்கும் பயனில்லை. ஆகவேதான் கற்றவரை எல்லாம் கல்விக் கண் ணுடையார் என்று சொல்லமுடியாது.

திருவள்ளுவரும், கற்றவர் யார்? கல்லாதவர் யார்? என் னும் வினுக்களை எழுப்புகின்றார்.

> " கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர் "

என்னும் திருக்குறள் (393) மூலம் அவரே விடையும் தருகின் றார். " கண்ணுடையவர் என்று சிறப்பித்துச் சொல்லப்படு பவர் கற்றவரே. கல்லாதவர் முகத்தின்கண் இருபுண்ணுடை யர்; கண்ணிலர் " என்பது இக்குறட்பாவின் கருத்தாகும்.

கல்வியின் அடிப்படையில், 'கண்ணுடையர், புண்ணுடையர்' என்று இருவகையினரைத் திருவள்ளுவர் இனம் பிரித்துச் சுட்டுகின்றார்.

"தேயமிடையிட்டவற்றையும் காலமிடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையிற் கற்றாரைக் கண்ணுடையரென்றும், அஃதின்றி, நோய் முதலியவற்றாற் றுன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே யுடைமையிற் கல்லாதவரைப் புண்ணுடையரென்றுங் கூறினார்.

என்று இக்குறட்பாவுக்கு நுண்பொருள் கூறும் உரையாசிரியர் பரிமேலழகரின் உரை நயம் பாராட்டிற்குரியது. உரையாசிரியர் பரிமேலழகர் கருத்துப்படி, ஞானக் கண்ணுடைய ஞானிகளையே கற்றவர் என்று கொள்ளுதல் வேண்டும். அவரே கண்ணுடையவராகின்றார்; ஏனையார் புண்ணுடையர் ஆகின்றனர். 'உலகியல் கூறிப் பொருளிது' என்று விளக்க வந்த பொய்யாமொழிப் புலவரின் 'கண்ணுடையர்' 'ஞானியரே' என்னும் பரிமேலழகரின் உரை. நயமாக இருப்பினும் முழுதும் பொருந்து மாறில்லை உலகில் ஞானியர் என்று தம்மைப் பறையறிந்து கொள்வோர், எளிய மக்களைவிட அஞ்ஞானத்தில் மிகுதியாக ஆழ்ந்து கிடத்தல் கண்கூடு ஞானம் கைவரப் பெற்ற ஞானியரைக் காணுதல் அருமையிலும் அருமை! மெய்ஞ்ஞானம் முற்றும் பெற்றுயர்ந்த அறிவரின் கல்விச் சிறப்பினை

"கற்றோர் அறியா அறிவினர் கல்விக்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்....."

என்று திருமுருகாற்றுப்படை போற்றுகின்றது தேயமிடையிட்டவற்றையும் காலமிடையிட்டவற்றையும் உணர்த்தும், பழைய இலக்கியம் கூறும் அகவன் மக்களாகிய இன்றைய குறி கூறுவோர், பெரும்பாலும் கல்லாதவராக இருக்கின்றனர். ஆகவே ஞானியரையே கண்ணுடையர் என்று திருவள்ளுவர் குறிக்கின்றார் என்று உரை கூறுதல் பொருந்தாது

பொருட்பால், அரசியலுள், கல்வி அதிகாரத்தில் அமைந்துள்ள இக்குறட்பாக்கள், இயல் அடைவு நோக்கிச் சிறப்பாக அரசர்க்கும், அதிகார அடைவு நோக்கிப் பொதுவாக அல்லார்க்கும் பொருந்துவன. அவற்றுள், 'கல்வியே கண்ணாகும்' என்றும் 'கற்றவரே கண்ணுடையர்; கல்லாதவர் புண்ணு

டையர்' என்றும் வரையறுக்கப்பெற்றுள்ளன. அப்படியாயின், இப்போதுள்ள பல்துறைக் கல்வி முறைப்படி. எத்தகைய கல்வியாளரைக் கண்ணுடையவர் என்று கொள்ளல் கூடும் என்பதிலும் இடர்ப்பாடு ஏற்படுகின்றது. பொதுவகையில் எழுதப் படிக்கத் தெரிந்தவரைக் கற்றவர் என்று இற்றை நாளில் கருதுகின்றோம். பள்ளியிறுதி வரையில் பயின்றவர் காற்கண்ணும், இளங்கலை படித்தவர் அரைக்கண்ணும், முதுகலை முடித்தவர் முக்காற் கண்ணும், ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர் முழுக்கண்ணும் பெற்றவர் என்று கொள்ளல் கூடுமா? இம் முறையுங் கூடப் பெரும்பாலும் பொருந்துவதில்லை ஏனென்றால், பட்டங்களைச் சுமப்பவர் அத்துணைபேரும் அவற்றிற்குத் தகுதியுடையவர் என்று கொள்வது சற்றுக் கடினமாக உள்ளது பட்டமே பெறாமல், தனி ஆர்வம் காரணமாகத் தம் கல்வியை வளர்த்துக் கொண்டு, பெரும் புலமையாளர்களும் வியக்கும் வண்ணம் கல்வியைக் கற்றுத் துறை போகிய பெருமக்களையும் உலகில் நாம் சந்திக்கின்றோம். ஆகவே கல்விப் பட்டங்களைக் கொண்டு ஒருவரைக் கண்ணுடையார் என்று உயர்த்திக் கூறவும் முடியவில்லை. பட்டம் பெறாமையினாலேயே ஒருவர் பெற்றுள்ள கல்வியைக் குறைத்து மதிப்பிடவும் முடியவில்லை. ஆண்டுகளை வரையறுத்துப் பயிலும் கல்வியை வள்ளுவர் வேண்டவில்லை; 'என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு?'' என்று கேட்கின்றார். சாகும் வரையில், கற்கும் எல்லையைத் தள்ளுவதால், இப்போதுள்ள வரையறை செய்யப்பெற்ற படிப்பும் கல்விக் கண்ணை முழுமையாகத் தருமா என்பது ஐயத்திற்குரியதாம்.

கற்றவரே கண்ணுடையர் என்பதால், கண்ணுடைமையின் இயல்புகள், இலக்கணங்கள் யாவை என்பதை வரையறுத்து விட்டால், கண்ணுடையர் யார் என்பது தெள்ளிதின் விளங்கும். அத்தகைய கண்ணுடையரே கற்றவர் என்று முடிவு கட்டவும் கூடும்.

திருக்குறளை ஊன்றிப் படிப்பவர்களுக்கு ஒரு நுட்பமான கருத்துப் புலனாகாமற்போகாது. திருவள்ளுவர் திருக்குறளைக் கூறும்போது, உடன்பாட்டிலும் எதிர்மறையிலும், வற்புறுத்தியும் வரையறுத்தும், வினாவாகவும் விடையாகவும், இலக்கணமாகவும், இலக்கியமாகவும், இவைபோன்ற பற்பல உத்திகளையும் கையாளுகின்றார். ஓர் அதிகாரத்தில் வினா ஒன்று வினவப் பெற்றிருந்தால், அதற்குரிய விடை வேறோர் அதிகாரத்தில்

அமைந்து கிடக்கும். ஓர் அதிகாரத்துள்ளிருக்கும், வரையறையின் விளக்கம் பிறிதோர் அதிகாரத்துள் பொதிந்து கிடக்கும். இவ்வகையில் நூலை நுணுகி ஆராய்வார்க்கே, திருவள்ளுவரின் தெள்ளிய கருத்தும் உள்ளமும் புலனாகும்.

கல்வி என்னும் அதிகாரத்தில் 'கண்ணுடையர் கற்றோர்' என்று கூறப் பெற்றுளது. கண்களின் இலக்கணத்தையும் இயல்புகளையும் 'கண்ணோட்டம்' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் தெளிவாக விளக்கியுள்ளார். ஆகவே, கண்ணோட்டம் பற்றிய அதிகாரக் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' என்னும் தொடர்க்குத் திருவள்ளுவரின் திருக்குறட் பாக்களாலேயே செறிவான உரைவளத்தைப் பெறமுடியும்.

"கண்ணுக்கு அணியும் நகை கண்ணோட்டமாகும், அந்த அணிகலன் இல்லையேல் அவை புண்ணாம் பாடலுடன் பொருந்தாத பண் பயன்படாததுபோல் கண்ணோட்டமில்லாத கண்ணினால் பயனில்லை. அளவினால் கண்ணோட்டமில்லாதகண், முகத்தில் உளபோல் தோன்றுவன அல்லாமல் வேறு பயனைச் செய்யா." என்று திருவள்ளுவர் கண்ணோட்டமில்லாத கண்களின் குற்றத்தைத் தொகுத்துக் கூறியுள்ளார். திருவள்ளுவரின் கருத்தைப் பற்றிய, "கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம்" என்று திரிகடுகமும் (52); 'கண்வனப்புக் கண்ணோட்டம்' என்று சிறுபஞ்சமூலமும் (9) "கண்ணுக்குப் புனைமணிப்பூண் கண்ணோட்டம் என்பதெல்லாம் கருணையன்றோ' என்று வில்லிபாரதமும் (அருச் தவம் 43) கண்ணோட்டத்தின் சிறப்பைப் பற்றியும்.

"கண்ணோட்ட மில்லாத கண் ......
ஒன்று நரம்பென்கோ ஒன்றாத என்பென்கோ
இன்தசைதான் என்கோ யாதென்கோ"

என்று பாரத வெண்பா கண்ணோட்டமில்லாத கண்ணின் இழிவு பற்றியும் கூறுகின்றன.

"கண்ணோட்டமுடைய கண் கண்ணாகும்; கண்ணோட்டமில்லாத கண் புண்ணாகும்," ஆகவே கண்ணோட்டமுடைய கண்களை உடையவரே கற்றவர்; கண்ணோட்டமில்லாத கண்களையுடையவரே கல்லாதவர் என்பது பெறப்படும். கண்ணோட்டமில்லாத கண்கள், உறுப்பால் கண்களாக அமையினும், அணி

கலனுகிய கண்ணேட்டத்தைப் பெருமையினுல், அவை கண்கள் என்று கருதப்பெருமல் புண்கள் என்று கருதப் பெற்றன. எண் எழுத்து ஆகிய இருகலைகளாகிய கல்விக் கண்களைப் பெற்றிருந்தால் மட்டும் கண்ணுடையர் என்று ஒருவரைக் கரு துதல் இயலாது ஏனென்ருல் கலைக்கண்கள் பெற்றிருப்போர், அவற்றிற்கு அழகாகிய கண்ணேட்டத்தைப் பெருமலும் இருத் தல் கூடும். கல்வியாகிய கண்களைப் பெற்றும் கண்ணேட்டம் பெறவில்லை என்ருல் அவரும் புண் சுமக்கும் கல்லாதவரே ஆவார். எண்ணும் எழுத்தும் ஆகிய இருகண்களையும் பெற்று, அக்கண்களுக்கு உடைமையாகிய கண்ணேட்டத்தையும் பெற்றி ருப்பவரே கற்றவராவர் என்னும் கருத்து நுட்பம் அறியத் தக்கது திருவள்ளுவரும்,

'கண்ணேட்டம் இல்லவர் கண்ணிலர், கண்ணுடையார்
கண்ணேட்டம் இன்மையும் இல்' (587)

என்று விளக்கியுள்ளார்.

"கண்ணேட்டமில்லாதவர் வாழ்தல் உலகிற்குச் சுமை யாகும்; அவர்கள் கண்கள் பெற்றும் பெருதவரே! அத்தகை யோர் மண்ணேடு பொருந்திய மரத்துக்கு ஒப்பாவர்" என்று கண்ணேட்டமில்லாத கண்களுடையாரைத் திருவள்ளுவர் பெரிதும் சாடுகின்ருர்.

தண்டித்து நல்வழிப் படுத்தும் இயல்புடையாரிடத்தும் கண் ணேட்டம் கொண்டு குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளலே தலைமைப் பண்பாகும்; யாவராலும் விரும்பத்தகும் நாகரீகமான கண்ணேட்டத்தை விரும்புகின்றவர், பழகியவர் தமக்கு நஞ்சு பெயக்கண்டும் அதனை உண்டு அமைவர்; தாம் மேற்கொண் டுள்ள செயல் சிதையாமல் கண்ணேட்டம் கொள்ள வல்லார்க்கே இவ்வுலகம் உரிமையுடையது என்று கண்ணேட்டமுள்ளவரைத் திருவள்ளுவர் புகழ்ந்து கூறுகின்ருர். கண்ணேட்டங் காரண மாக நஞ்சுண்டு அமைதலை,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்று நற்றிணையும் (355)

"நஞ்சுயிர் செகுத்தலும் அறிந்துண்டாங்கு"

என்று கலித்தொகையும் (74) புலப்படுத்துகின்றன.

"பண்புடையாரிடத்துப் பொருந்துவதாலேயே இவ்வுலகம் இருக்கின்றது இல்லையேல் மண்ணில் புகுந்து மாய்ந்து போகும்" என்று (996) பண்புடைமையிலும், "கண்ணோட்டம் என்னும் மிகச் சிறந்த அழகு உள்ளதால் இவ்வுலகம் நிலைத்துள்ளது என்று (581) கண்ணோட்டத்திலும், இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கான காரணங்களைத் திருவள்ளுவர் கற்பிக்கின்றார். கண்ணோட்டத்தாலேயே இவ்வுலகம் நிலைப்பதற்குக் காரணம், "கண்ணோட்டத்துள்ளது உலகியல்" என்று மேலும் அவர் விளக்குகின்றார்.

கண்ணோட்டத்தால் உலகியல் நிகழ்கின்றது. உலகியல் என்பது உலக இயக்கம் அல்லது உலகநடை ஆகும். உலக நடை என்பதற்கு, "ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் என்று இவை முதலாயின" என்று உரையாசிரியர் பரிமேலழகர் பொருள் கூறுவர். பல கற்றும் உலக நடையைக் கல்லாதவரைப் பற்றி,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்று கூறும் குறட்பாவின் (140) கருத்தும் இங்குக் கருதத்தக்கது.

கண்ணோட்டம் என்பதற்குத். "தன்னோடு பயின்றாரைக் கண்டால், அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர் கண் மேல் சென்ற வழி நிகழ்வதாகலின் அப்பெயர்த் தாயிற்று" எனப் பரிமேலழகரும், "கண்ணோட்டமாவது கண்ணால் காணப் பட்டவரை அருள் செய்தல்" என மணக்குடவரும் உரை கூறினர் கண்ணோட்டம் என்பதற்கு இரக்கங்காரணமாக அருள் செய்தல் என்பதே முற்றிலும் பொருத்தமான பொருளாகும்.

கற்றவரே கண்ணுடையவர், கண்ணுக்கு உடைமையாகிய கண்ணோட்ட முடையவர். கண்ணோட்டத்துள்ளதாகிய உலகியலை இயக்குவர்; உலகியலாகிய ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் இவைபோன்ற பிறவற்றையும் நிகழ்த்துவர். உலகியலை நிகழ்த்துதலினாலே உலகை வாழ்விப்பர். ஆகவே, கற்றவர்க்குக் கண்வேண்டும்; கண்ணோட்டமாகிய அருட்பண்பு வேண்டும் கைம்மாறு கருதாத மேகம். நீர் நிறைந்த ஊருணி, உள்ளூர்ப் பழுத்த பயன்மரம்; மருந்து மரம் இவைபோன்ற இயல்பினராகிக் கற்றவர்கள் உலக நடை

யினை அறிந்து ஒப்புரவு செய்தல் வேண்டும்; காக்க வேண்டிய வற்றைக் காத்துப் போற்ற வேண்டும் ; காரணங் கருதியோ பேதைமையினாலோ நெறியின் நீங்கிய பிழைகளைப் பிறர் சூழினும், நிலம்போன்று அவற்றைப் பொறுக்கும் இயல்பினராதல் வேண்டும். கண்கள், எவ்வாறு பிறவுறுப்புக்கள் தம்மைப் பற்றிக் கருதாதபோதும், அவற்றின் துன்பத்தில் வருத்தமும், இன்பத்தில் மகிழ்ச்சியும் அடைகின்றனவோ, தம்மைப் பற்றிப் பிறர் கவலையுறாதபோதும், பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதலும், அவர் மகிழும்போது அம் மகிழ்ச்சியின் இன்பத்தை மிகுவித்தலும் கற்றவர் கைக்கொள்ளவேண்டிய தலைமைப் பண்புகளாகும். அவரே கண்ணோட்டமுடையவர் என்று கருதும் சிறப்புடையாராவர் இக் கண்ணோட்டம் தனி ஒருவரைப் பற்றி மட்டும் நிற்காமல், வீடு, நாடு, உலகம் என்று பரந்து விரிந்து செல்ல வேண்டும் ஆகவே கண்ணுடையர் என்பதற்குக், கண்ணோட்டமாகிய கருணைப் பண்புடையர் என்று உரை கொள்ளலே செறிவுடையதாகும். காலமிடையிட்டவற்றையும் தேயமிடையிட்டவற்றையும் காணும் ஞானக் கண்ணுடையார்' என்று பரிமேலழகர் கூறும் உரை, பொருட் பொலிவின்மையாதலானும், திருக்குறளின் பிற கருத்துக்களை இணைத்துச் செறித்துக் கூருமையானும், திருவள்ளுவரின் கண்ணுடையார், உரையாசிரியர் கூறுவார் அல்லர் என்பது பெறப்படும்.

"நோய் முதலியவற்றாற் றுன்பம் செய்யும் ஊனக் கண்ணையுடைமையிற் கல்லாதவரைப் புண்ணுடையர் என்றும் கூறினர்" என்று, "புண்ணுடையர் கல்லாதவர்" என்னும் குறட்பாவுக்குப் பரிமேலழகர் கூறும் உரையும் பொலிவு பெறுமாறு இல்லை. கல்வியாகிய கண் பெற்றிருந்தும், கண்ணோட்டத்தைக் கொள்ளாமலும், கல்வியின் ஆக்கத்தைப் பிறர்க்கருளாமலும், கண்ணிருந்தும் குருடராகப் பயனற்று வாழும் கற்றவர் கண்களையே புண்கள் என்றும், கண்ணோட்டமில்லாத கண்களையுடையவரே புண்ணுடையர் என்றும், கற்றும்; கல்வியாகிய கண் பெற்றிருந்தும் ; கல்விப் பயனைப் பிறர்க்காக்கித் துய்க்காமையினாலே கற்றவராயினும், புண்ணுடைமையினால் அவரும் கல்லாதவரே என்றும் — நுண்ணறிதின் விளக்கும் திருவள்ளுவரின் பெரும் புலமைத் திறம் வியந்து போற்றற்குரியது.

தமிழர்தம் வாழ்க்கைத் தத்துவம் இறைமை இயல்புடன் ஒன்றிக் கிடக்கும் நீர்மை இங்கு நினைவு கூரத்தக்கது நீலமணி

மிடற்றேனாகிய ஆலமர் செல்வனை "முக்கண்ணன்" என்று கலித்தொகை போற்றிக் கூறும். மூன்று கண்களிலே ஒன்று ஞாயிறாகவும், மற்றொன்று திங்களாகவும், பிறிதொன்றாகிய நெற்றிக்கண் தீயாகவும் கருதப் பெறுகின்றன. இறைவனின் பேரருட் பெருங் கருணையால், ஞாயிறு இருள் நீக்கி ஒளி தருகின்றது; திங்கள் குளிர் செய்து அருள் பொழிகின்றது; நெருப்பு, தூய்மைப் படுத்துகின்றது. இருள் நீக்கி ஒளி செய்தல், அருள் செய்து வாழ்வித்தல் தீயன அழித்துத் தூய்மைப் படுத்தல் ஆகிய மூன்று அருட் பண்புகளையும் மூன்று கண்களாக இறைவன் கொண்டுள்ளமையைத் தமிழ் வேதம் சிறப்பித்துப் பேசும். இந்தத் தத்துவப்படிப் பார்த்தால் கூடக் கண்ணுடையார் கல்விக் கண்ணற்ற பிறருடைய மனவிருள் போக்கி ஒளிதர வேண்டும்; இன்னருளால் கலை வளர்த்து முழுமையாக்க வேண்டும், அறத்திற்கு மாறானவற்றை நீக்கி அகத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும் என்பன பெறப்படுகின்றன.

இந்நாள் கல்வி, ஊதியம் பெற்று வயிற்றை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றதே தவிர, வள்ளுவர் வரையறுக்கும் கற்றவராக வாழக் கற்பிப்பதில்லை. கல்விக் கண் பெற்றவராகவும் கற்றவர்களை அது உருவாக்குவதில்லை.

> "அறியாமையாலும் வறுமையாலும் கோடிக்கணக்கானவர் இறக்கும்வரையில், தந்நலமிக்க படித்த ஒவ்வொருவரையும் நான் செய் நன்றி கொன்றவராகக் கருதுவேன்"

என்று விவேகானந்தர் பொதுநலம் பேணாத படித்த கூட்டத்தைப் பார்த்துக் தொடுக்கும் கண்டனக்கணை ஆழ்ந்த சிந்தனைக்குரியது. வீடும் நாடும் நலம்பெற, வாழுமுயிர்க்குக் கண் வேண்டும்; கல்விக் கண் வேண்டும்; அக்கல்விக் கண்ணும் கண்ணோட்டமுடைய கண்ணாதல் வேண்டும். கண்ணோட்டமுள்ள கண்ணுடைய கற்றவராலேயே உலகை வாழவைக்க முடியும்.

> "உண்டா லம்ம இவ்வுலகம் ....
> ....
> தமக்கென முயலா நோன்றாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!"
>
> — புறநானூறு 182.

திருவள்ளுவ மாலை

அ. தட்சிணமூர்த்தி, எம். ஏ.,
தமிழ்த்துறை, அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி.

திருக்குறளையும் அதனைப் படைத்த திருவள்ளுவரையும் பாராட்ட எழுந்த விழுமிய நூலே திருவள்ளுவமாலை. இதன்கண் ஐம்பத்து மூன்று நேரிசை வெண்பாக்களும், இரண்டு குறள் வெண்பாக்களும் உள்ளன- திருக்குறள் ஏட்டுப்படிகள் அனைத்திலும் அன்றிச் சிலவற்றிலேயே இச்செய்யுட்கள் உள்ளன என்பர் இவை அனைத்தும் சங்கப் புலவர் பெருமக்களாற் செய்யப்பட்டனவே என நம்புவார் பலர். இதனை மறுப்பாரும் பலர் இவ்விரண்டு கருத்துக்களில் ஏற்புடையதைக் கொள்ளல் வேண்டும். முன்னைய கருத்துடையார் சங்க காலத்திலேயே திருவள்ளுவர் சான்றோர்களால் பெரிதும் போற்றப்பட்டார் என்றால் அஃது திருவள்ளுவர்க்குப் பெருமை என்று கருதுவோராவர். இவர்கள் ஒரு புறமிருக்க, திருவள்ளுவர் சங்க காலத்திற்கு முற்பட்டவர் என்பாரும் உளர். அஃதெவ்வாறாயினும், திருவள்ளுவமாலையின் காலத்தை ஆய்வதே நமது நோக்கம். இந்நூலின் செய்யுட்கள் யாவும் திருக்குறள் பெரிதும் போற்றப்பட்ட பிற்காலத்தில் ஒருவராலோ அன்றிச் சிலராலோ சங்கச் சான்றோர் பெயரில் பாடப்பட்டிருக்கலாம் என்பதே வலிவுடையதாய்த் தோன்றுகிறது அதற்குரிய ஏதுக்களை ஆய்வது நமது நோக்கமாகும்

பாடல் எண்ணிக்கை,

இந்நூலில் உள்ள 54, 55-ஆம் பாடல்கள் குறள் வெண்பாக்களாகும். இவை கழகப் பதிப்பில் எண்ணின்றிப் பதிப்பிக்கப்பட்டுள்ளன எனவே இந்நூலில் முதலில் 53 வெண்பாக்களே இருந்தனவாதல் வேண்டும். இவ்விரண்டு குறள் வெண்பாக்களும் பிற்காலத்து வாழ்ந்த ஒரு புலவரால் இயற்றப்பட்டிருக்கலாம். தொகை நூல்கட்கு வாழ்த்துச் செய்யுள் பாடிய பெருந்தேவனர். அவ்வந் நூலின் நடைக்கேற்பவும். அடிவரையறைக்கேற்பவுமே பாடினர், அவ்வாறே குறள்யாப்பில் தோன்றிய திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாக எழுந்த நூலும் அதே யாப்பில் அமைந்திருந்தால் பொருத்தமாக விருக்கும் ஆனல் இந்நூல் நேரிசை வெண்பாவால் இயன்

றுள்ளது. இக்குறையை நிறைவு செய்யவே பிற்காலச் சான்ரேர் ஒருவர் இறுதிப் பாடல்கள் இரண்டையும் பாடிச் சேர்த்திருக்கிருர். இப்பாடல்கள் இடைக்காடர், ஔவையார் என்னும் இருவர் பெயரால் அமைந்ததேன்? என்னும் விஞ எழலாம். இடைக் காலத்தில் ஔவையார் இடைக்காடர் இருவரும் சமய வுலகில் தொடர்பு படுத்தப்பட்டனர். சோமசுந்தரப் பெருமானை மதுரையை விட்டு நீங்கச் செய்தவர் இடைக்காடர் என்றும், முருகப் பெருமானிடம் தோற்றவர் ஔவையார் என்றும் இடைக் காலத்தில் கதைகள் வழங்கின. எனவே இவ்விருவர் பெயரிலும் இப்பாடல்கள் வழங்குமாறு செய்தனர் எனலாம்.

திருவள்ளுவ மாலையும் களவியலுரையும் :-

இவ்விரு குறள் வெண்பாக்களையும் நீக்கிஞல் எஞ்சியுள்ள 53 வெண்பாக்களில் முதல் நான்கு பாக்களும் முறையே அசரீரி, நாமகள், இறையனுர், உக்கிரப் பெருவழுதி ஆகியோர் பாடியவை. இவற்றை நீக்கிப் பார்ப்பின் புலவர் எண்ணிக்கை 49 என அமையும். சங்கங்கள் பற்றிய வரலாறுகளை முதன்முதல் கூறிய நூல் களவியலுரையே. இந்நூலில் கடைக் கழகம் வீற்றிருந்த புலவர் தொகை 49 என்றே கூறப்பட்டுள்ளது. கடைக் கழகத்தைப் புரந்த இறுதி மன்னன் உக்கிரப் பெருவழுதி என்பதும் இந்நூற் செய்தியே. நக்கீரரது உரையைத் தெரிந்தெடுத்தவன் உருத்திரசன்மன் என்றும் இந்நூல் கூறும். இந்த நூல் கி பி எட்டாம் நூற்ருண்டினது என்பர். இதன் செய்திகளைத் தழுவியே இந்தத் திருவள்ளுவ மாலை அமைந்துள்ளது. களவியலுரையைத் தழுவியே 10 ஆம் நூற்ருண்டினரான நம்பியாண்டார் நம்பிகள் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்போர் கபிலர், பரணர், நக்கீரர் முதலிய 49 புலவர் என்ருர். நம்பிகள் கூறிய வரிசைப் படியே கபிலர், பரணர், நக்கீரர் பெயரிலமைந்த பாடல்கள் இந்நூலில் வைக்கப்பட்டுள. "கொங்குதேர்" எனத் தொடங்கும் பாடலை இறையனுர் என்ற புலவர் இயற்றினுர். இதனைச் சிவபெருமான் இயற்றியதாக இடைக்காலத்தில் கதை எழுந்தது. இதற்கேற்பவே இந்நூலின் மூன்றும் செய்யுளும் இறையனுர் பெயரில் வழங்குகிறது சங்கப் பலகை பற்றிய கதையும் பிற்காலத்ததே. திருக்குறள் அரங்கேற்றப்பட்டபொழுது சங்கம் அழிந்ததென்ற கதையும் இடைக் காலத்ததே அதற்கேற்பவே இறுதியாகச் சங்கத்தினைப் புரந்த உக்கிரப்பெரு வழுதிக்கும் இந்நூலில் இடமளிந்தனர். இச்செய்யுட்களில் முதல் நான்கையும் பிற்காலத்தொருவர் பாடியிருக்க

லாம் என்று திரு A. V. சுப்பிரமணிய அய்யர் ஒப்புக்கொண்டு ஏனையவற்றைச் சங்கப் புலவர்களே இயற்றினர் என்கிறார். கடவுள் பெயரிலேயே பாடல்களை இயற்றியோர், மனிதர் பெயரில் இயற்றத் தயங்குவரோ?

வடமொழி — தென்மொழி மோதல் :-

தொல்காப்பியர் காலந்தொட்டே வடமொழியும், அதன் மறைகளும் தமிழரால் அறியப்பட்டிருந்தன. சங்க இலக்கியத்துள்ளும் வடமொழி வேதம் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் வடமொழியையும் தமிழையும் ஒப்பிட்டு ஒன்றினும் ஒன்று உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்று போராடும் நிலை அன்று இருந்ததாகச் சான்றில்லை, ஆனால், காலப்போக்கில் வடமொழியாளரின் செல்வாக்கு ஓங்கிற்று. பல்லவர் காலத்தில் ஏற்பட்ட ஆரிய மேலாதிக்கம் சோழர் காலத்தில் உச்சநிலையடைந்தது. இவ்விடைக் காலத்தில் வடமொழிவாணர்கள் அதனைத் தெய்வ மொழியென்றனர் வேதம் இருப்பதனையே ஒரு தனிச் சிறப்பாகக் கருதினர், இந்நிலையில் மொழிப்பற்று மிக்க தமிழர்கள் தமிழையும் தெய்வ மொழியென்று கூறத் தலைப்பட்டனர். அதற்கேற்பவே சிவபெருமானோடும் திருமாலோடும் தமிழை இணைத்துக் கதைகள் கட்டினர். இறைவனே சங்கத்தில் உறுப்பினனாக இருந்தான் என்றும். அவனே செய்யுள் இயற்றினன் என்றும், தமிழ்ப் பாட்டை விரும்பிக் கேட்டான் என்றும். புலவன் கட்டளைக்கேற்ப அவனைப் பின்தொடர்ந்து காஞ்சியை விட்டும் மதுரையை விட்டும் வெளியேறினன் என்றும் புராணம் பாடினர் சைவர்கள் தேவாரத்தையும், வைணவர்கள் நாலாயிரத்தையும் வேதம் என்றே போற்றினர் திருக்குறளையும் வேதம் என்று கூறத் தலைப்பட்டனர். வடமொழியில் தமிழிலில்லாத இதிகாச புராணங்கள் இருந்தன அவற்றையும் தமிழில் பாடமுனைந்து வெற்றியும் பெற்றனர். நான்மறைக்கொப்பானது திருக்குறள் என்று கூறுவதோடு அதனினும் ஒரு வகையில் மேலானது என்று கூறும் பாடல்கள் பலவற்றைத் திருவள்ளுவ மாலையில் காணுகின்றோம். 23ஆம் செய்யுள், "வடமொழி மறைக்குரியார் அந்தணரே. ஆனால் திருக்குறட்கு உரியார் அல்லாதார் இல்லை" என்கிறது. 15 ஆம் பாட்டு. "ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்போற்றி ஏட்டின் புறத்தெழுதார். ஆனால் திருக்குறளை வல்லுநரும் வல்லாரும் சொல்லிடினும் ஆற்றல் குறைவதில்லை" என்கிறது. துறைமங்கலம் சிவப்பிரகாசர் திருவாசகத்தையும் வேதத்தையும்

ஒப்பிட்டுக் கூறுவது போன்றதே இது. இத்தகைய இடைக் கால வுணர்ச்சியை வெளியிடும் வள்ளுவ மாலையும் இடைக் காலத்தது என்பதில் ஐயமில்லை.

சொல்லாட்சி :-

சங்க காலத்தில் இல்லாத — மிகவும் பிற்காலத்துச் சொல் லாட்சிகளை இந்நூலில் காண்கிறோம். நான்காம் செய்யுளில் வந்திக்க. சிந்திக்க என்னும் சொற்கள் உள. புலவர்களைப் பாவலர், நாவலர் என்று கூறும் வழக்கமும் பிற்காலத்ததே. 17, 18 ஆம் செய்யுட்களில் பாவலர் என்னும் சொல்லும் 22 ஆம் பாட்டில் நாவலர் என்னும் சொல்லும் உள. உலகம் என்னும் பொருளில் அகிலம் என்னுஞ் சொல் 52 ஆம் பாடலில் இடம் பெறும். அறம் என்ற பொருளில் தருமம் என்னும் சொல் 44 ஆம் செய்யுளில் ஆளப் பட்டுள்ளது. மன்னர்கள் பெயருக்குப் பின் 'ஆர்' விகுதி சேர்த்தல் சங்க நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் கூட இல்லை. உக்கிரப் பெரு வழுதியார் என்ற ஆட்சியை இங்கே காண்கின்றோம், சரீரி, அசரீரி என்னும் வழக்கும் பிற்காலத்ததே, சமய எழுச்சிக் காலத்தில் ஆழ்வார், நாயன்மார்கள் தலங்களின் பெயர்க்கு முன்னர்த் திரு என்னும் அடைமொழி சேர்க்கும் நிலை உருவா யிற்று. இங்கெல்லாம் திரு என்னும் சொற்குத் தெய்வத் தன்மை என்ற பொருளேயுண்டு சங்க காலத்தில் அழகு, செல்வம், திருமகள் என்ற பொருளே யுண்டு. வள்ளுவர்க்கும் அவரது நூலுக்கும் திரு என்ற அடைமொழி சேர்க்கப்பட்டதும் இடைக் காலமாகவே இருக்கவேண்டும். மூன்று பாக்களில் திருவள்ளுவர் என்ற பெயருண்டு. ஸ்ரீ என்ற எழுத்தின் இடத்தில் 'சீ' என்ற தமிழெழுத்தை யிட்டு எழுதுவதனைப் பல்லவர் சோழர் காலக் கல்வெட்டுகளில்தான் முதலில் காண்கின்றோம். 30 ஆம் செய் யுளில் சீராமகதை என்ற தொடரைக் காணலாம். ஆறு என்ற பொருளில் நதி என்ற சொல்லை 10 ஆம் செய்யுளில் ஆள்கின் றனர். இப்பிற்கால வடிவங்களே இந்நூலின் காலத்தை அறி யச் சிறந்த சான்றுகளாக அமையும்.

பொருத்தமில்லாக் கதை :-

சங்க காலப் புலவர் சிலரது வரலாறுகளைப் பிற்கால மக்கள் தம் விருப்பப்படிப் புனைந்து கூறி வந்துள்ளனர். வள்ளுவர், கபிலர், ஔவையார் போன்றோர் பற்றிய புனைகதைகளைத் தமிழுலகு நன்கறியும். சீத்தலைச் சாத்தனார் வரலாறும் அத்தகை

யதே. பாண்டிய நாட்டில் சீத்தலை என்பதோரூர். பண்டைக் காலத்தில் அவரவரின் ஊரொடு சேர்த்துப் புலவர்களைக் குறிப் பிடல் பெருவழக்காம், அவ்வாறே சீத்தலைச் சாத்தனார் என்ற பெயர் அமைந்தது இதனையறியாத மக்கள் சீழ்த்தலை என்று பிறழவுணர்ந்து, குறையுடைய பாக்களைக் கேட்டபோதெல்லாம் வெறுப்புற்ற சாத்தனார், தம் எழுத்தாணியால் தலையில் குத்திக் கொண்டதனால் எந்நேரமும் தலையில் சீழ் வடிந்தது என்றும் அதனாலேயே இப்பெயர் வழங்கிற்று என்றும் கூறலாயினர், இக்கதையைப் புனைந்தோர் சீத்தலை என்பது ஊர்ப்பெயர் என்று அறியார். மேலும் சீழ் + தலை — சீழ்த்தலை என்றாகுமேயன்றிச் சீத்தலையாகாதென்ற அடிப்படையிலக்கணமும் அறியாத பாமர ராவார். இவ்வறியாமையினைப் பெரும் புலவராம் மருத்துவன் தாமோதரனார் மேல் சுமத்துவதனினும் வேறு கொடுமையில்லை. தம்முடன் வாழ்ந்து வரும் ஒரு புலவருடைய ஊரைக் கூட அறியாத நிலையினர் என்று அவரைக் கொள்ள முடியுமா? அவர் தான் எழுதினார் என்று பிற்காலத்தவர் எண்ண வேண்டும் என்பதற்காக அவர் பேரால் எழுதிய பாடலில் மருத்துவக் குறிப்பினைக் காட்டியுள்ளனர்.

“சீந்திநீர்க் கண்டம் தெரிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்”

என்ற குறிப்பைக் காண்க. மேலும் சாத்தனார் பேராலமைந்த செய்யுளையும் அதனோடு சேர்த்து வைத்துள்ளனர்.

பொருந்திய புனைவு :-

பாரதத்தைத் தமிழில் பாடியதால் ஒரு புலவர் ‘பாரதம் பாடிய பெருந்தேவனார்’ எனப்பட்டார். இவரே தொகை நூல் கட்கு வாழ்த்துப் பாடியவர். அவர் இயற்றினார் என்று நம்ப வேண்டும் என்பதற்காகவே அவர் பெயராலமைந்த பாடலில் அவரோடு தொடர்புடைய பாரதம். குறிக்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்குப் பாரதம், சீராமகதை, பண்டை மனு, மறை ஆகியவை தவிர வேறு நூல்கள் நேராகா என்பதே இப்பாடற் கருத்தாம். ஒரே பெயருடைய புலவர்கள் பல காலங்களில் வாழ்ந்துள்ளனர் கல்லாடர் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந் தவர். கி பி. 9 ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவராகக் கல் லாடதேவ நாயனார் என்பவர் அறியப்படுகிறார். இவரது திருக்கண்ணப்பதேவர் திருமறம் “ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர் ஒரு கல்லாடரா

வார். இம்மூவரினும் வேருன கல்லாடர் ஒருவர் பாடிய நூல் கல்லாடம் என்றே வழங்கும்'' கல்லாடம் கற்றவனிடம் சொல் லாடாதே'' என்ற வழக்கும் உண்டு. திருக்கோவையார் போன்று அகப்பொருள் நலம் கனிய எழுதப்பெற்ற இந்நூல் சேக்கிழார் காலத்திற்குப் பிறகு தோன்றியிருக்க வேண்டும். முன்பே தோன்றியிருப்பின் திருமுறை வரிசையில் இடம்பெற் றிருக்கும். இந்நூலாசிரியர் திருவள்ளுவரைச் ''சமயக் கணக்கர் மதிவழி கூருது உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்'' என்று பாராட்டியுள்ளார். கால ஆராய்ச்சி சரியாக நடை பெருத இடைக் காலத்தோர் பெயரொற்றுமையொன்றே கொண்டு எல்லாக் கல்லாடரையும் ஒருவரேயென மயங்கினர். இத்தகைய மயக்கத்தில்தான் கல்லாடர் பெயரில் எழுதிய வெண் பாவில் வள்ளுவரின் சமயப் பொதுமையைக் காட்டி, கல்லாடம் இயற்றிய கல்லாடரே இவ்வெண்பாவையும் பாடினுர் என நம்ப வைக்க முயன்றுள்ளனர். அவ்வெண்பா வருமாறு:—

''ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் — நன்றென
எப்பாவலரும் இயைபவே வள்ளுவனுர்
முப்பால் மொழிந்த மொழி''

திருக்குறளையும் திருவள்ளுவரையும் சங்கப் புலவர்களே பெரிதும் போற்றினர் என்று கூறினுல் திருவள்ளுவத்தை மக்கள் பெரிதும் பாராட்டிப் பயிலுவர் என்ற நல்லெண்ணமே இந் நூலெழக் காரணமாகும். சிறந்த கருத்துக்களைக் கூறும் பல பிற்கால நூல்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்னர் வாழ்ந்து மறைந்த புகழ்மிக்க புலவர்கள் பெயரால் இன்றும் வழங்குகின் றன. அகத்தியர் பெயரால் வாழும் சோதிட, மருத்துவ நூல் கள் பலவாகும். கம்பர், ஔவையார் போன்ருேர் பெயரால் வழங்கும் தனிப்பாடல்கள் பலவாகும். சித்தர் பாடற் பகுதி யிலுள்ள பட்டினத்தார் பாடல்கள் அவருடையன அல்லவென அறிஞர்கள் நாட்டியுளர், பன்னிரு படலத்தின் வெட்சிப் பட லம் தொல்காப்பியர் பெயரால் வாழ்கிறது இதன் பொருத்த மின்மையை இளம்பூரணரே காட்டியுள்ளார். ஞானவெட்டி யான் என்ற நூல் வள்ளுவர் பெயரால் வாழ்வு பெற்றுள்ளது. எனவே இத்தகைய போக்கு, தமிழுலகில் புதியதன்று என்ப தனை உளம்கொண்டு இக்கட்டுரையில் கூறப்பட்ட செய்திகளைச் சிந்திக்க வேண்டும். இது முடிந்த முடிபன்று. மேலும் ஆயத் தக்கதேயாம்.

வள்ளுவத்தில் வாய்மொழி இலக்கியம்

தே. லூர்து, எம். ஏ.
தமிழ்த் துணைப்பேராசிரியர், சவேரியார் கல்லூரி,
பெருமாள்புரம், திருநெல்வேலி - 7.

வாய்மொழி இலக்கியமே (Oral Literature) எழுத்திலக்கியத்தில் (Written Literature) முன்னோடி; அதாவது வாய்மொழி இலக்கியத்தின் உள்ளடக்கம் அல்லது வடிவக் கூறுகள் அல்லது அமைப்பு முறை அல்லது யாப்பு முறை அல்லது இசை முதலியவை எழுத்திலக்கியத்தில் ஊடுருவி நிற்பதை இன்றும் காணலாம். எழுத்திலக்கிய ஆய்வுக்கு வாய்மொழி இலக்கிய ஆய்வு எவ்வளவு இன்றியமையாதது என்பதனை இக்கட்டுரை உணர்த்தும்.

"வாய்மொழிப் பாடல்களின் இன்றியமையாமையை நம் இலக்கிய வரலாற்றுசிரியர்கள் காலங்கடந்தே உணர்ந்துள்ளனர். ஆயினும் பரந்துபட்ட முறையில் தமிழிலக்கிய வரலாற்றை எழுதுதற்கு இது நல்ல அறிகுறியாகும். தமிழ்நாட்டில் வழங்கி வரும் பழமொழிகள், நல்லுரைகள் என்பவற்றை ஒத்தவை திருக்குறள் பழமொழிநானூறு, வேறு சில நீதிநெறிகாட்டும் இலக்கியங்கள் ஆகியவற்றில் நிறைந்து காணப்படுகின்றன, மக்களின் வாய்மொழியில் மட்டுமே வழங்குகின்றவை சில. இலக்கியத்தில் மட்டுமே காணப்படுகின்றவை சில. இவற்றை ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் இவை மக்களிடமிருந்து பெறப்பட்டனவா? அன்றிச் சமற்கிருதம், பாகதம் முதலிய பிறமொழிகளிலிருந்து கடன் வாங்கப் பட்டனவா என்னும் கேள்விக்கு விடைகாண உதவியாயிருக்கும்" என்பர் பேராசிரியர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள்.

வாய்மொழி இலக்கியச் செல்வாக்குத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுவதைச் சுட்டி ஆய்வு செய்தோர் சிலரே. சங்க இலக்கியத்தில் வாய்மொழி இலக்கியச் செல்வாக்கினைப் பற்றி ஆய்ந்தவர் டாக்டர் கைலாசபதி ஆவர். பேராசிரியர் நா. வானமாமலை அவர்களும் டாக்டர் ப. ரா சுப்பிரமணியம் அவர்களும் சிலம்பில் வாய்மொழி இலக்கியச் செல்வாச்குக் குறித்து இரு வேறு முறையில் ஆய்ந்து நிறுவியுள்ளனர். பேராசிரியர் திரு. ஆறு. அழகப்பன் சிற்றிலக்கியங்களில் வாய்மொழி இலக்கிய நீரோட்டம் குறித்து எழுதியுள்ளார்.

இவர்களை ஒட்டி இக்கட்டுரையில் திருக்குறளையும் வாய்மொழி இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் காண முயன்றுள்ளேன்.

மக்களின் வாய்மொழியில் வழங்கிய பல பழமொழிகளை வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார் என்பதனைக் காண்பது நலம்

முதலில் வாய்மொழி இலக்கியத்தின் உள்ளடக்கம் (content) குறளில் எவ்வாறு அமைந்துள்ளது எனக் காண்போம் பழந்தமிழ் இலக்கியமான அகநானூற்றில் மாமூலனார் பழமொழியை எடுத்தாண்டுள்ளார். அதனை அவருடைய வாய்மொழியே எடுத்து இயம்புகின்றது.

அம்ம வாழி தோழி யிம்மை
நன்றுசெய் மருங்கில் தீதில் என்னும்
தொன்றுபடு ழமொழி யின்று பொய்த் தன்றுகொல்
அகம் : 101

என்பது பாடல் அடிகளாம் இவ்வடிகளில் "இம்மை நன்றுசெய் மருங்கில் தீதில் என்பது பழமொழி என்பதைத் தெள்ளத் தெளிவாக மாமூலனார் தொன்றுபடு பழமொழி என்று சுட்டுகின்றார்,

ஆனால் மாமூலர் இப்பழமொழியை யாப்பிற்காக மக்கள் வாய்மொழியில் வழங்கிய முறையினின்றும் சிறிது மாற்றியிருந்திருப்பார் என்று நாம் முடிவு செய்யலாம். மேலும் " இலக்கியத்தில் காணப்படும் பழமொழிகள் கண்டிப்பாக சாதுரியத்திறமானதாகவும், அழகுறுத்தப்பட்டதாகவும் சொற் சுருக்கமின்றிச் சிறிது விரிவாகவும், வழக்கிற்கு மாறுபட்டதாகவும் காணப்படும். மக்களின் வழக்கில் உள்ள பழமொழிகள் கூர்மையாகவும் சென்று தாக்கக் கூடியவாகவும், இயல்பானவாகவும், மரபுத்தொடராகவும் காணப்படும். " என்பர் ரெ. பிரௌன் என்பார். ஆதலின் செய்யுளுக்காக கண்டிப்பாகப் பழமொழிகளை மாற்றியமைப்பர் என்பது தெளிவு.

சங்கச் சான்றோராகிய மாமூலனாரின் காலத்திற்குப் பிந்தியவர் வள்ளுவர். வள்ளுவர் காலத்தில் இப்பழமொழி சிறிது திரிபுற்றிருக்கலாம். அல்லது வள்ளுவர் இதனைத் திரித்து வழங்கியிருக்கலாம் மாமூலனார் நல்லது செய்தால் நல்லது விளையும் என்று கூறியதற்கு மாறாக,

" பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். " குறள் 319

என்று வள்ளுவர் கூறியிருக்கலாம். 'நன்று செய் மருங்கில் தீதில்' என்பது மாமூலனர் காலத்துப் பழமொழி என்றும் வள்ளுவரின் குறளில் காணும் பழமொழி வேறு ஒன்று என்றும் கூறலாம்.

மேலும் இவவிடத்தில் ஜான்வன்சின என்பாரின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுதல் நலம். அவர் வாய்மொழி இலக்கியத்தை இரண்டு பகுதியாகப் பிரிக்கின்றார் நிலைத்த தொடர் அமைப்புடையது (fixed phrase genre) எந்தவிதக் கட்டுப்பாடின்றியும் வரும் தன்மையுடையது (free phrase genre) என்று பிரிக்கின்றார். முதல் வகையில் பழமொழிகள், விடுகதைகள் முதலியவை அடங்கும்; இரண்டாவது வகையில் மூட நம்பிக்கைகள், நகைச்சுவைத் துணுக்குகள், நாட்டுப்புறக் கதைகள். கதைப் பாடல்கள் அடங்கும் என்கிறார் நிலைத்த தொடர் அமைப்புடையவற்றில் சொற்கள் மரபானவை. ஆனால் இரண்டாவது வகையில் சொற்கள் மாறிவரும்; வாய்மொழி இலக்கியத்தைச் சொல்லும் ஒவ்வொருவரும் (Informant) சொல்லும் ஒவ்வொரு முறையும் மாற்றியே சொல்லுவர்.

தமிழ் மக்களிடை வழங்கும் பழமொழிகள் பெரும்பாலும் நிலைத்த அமைப்புடையவையாகவே திகழுகின்றன ஏனைய உலக மொழிகளிலும் இவ்வாறே காணப்படுகின்றன. ஆனால் இலக்கியத்தில் புலவர்கள் பழமொழியைக் கையாளும்போது வழக்கில் உள்ளவற்றைச் சிதைத்தே கையாளுகின்றனர்; நயப்படுத்துகின்றனர்; மாற்றுகின்றனர்.

வள்ளுவரின் "இன்னா செய்யின் இன்னா தானே வரும்" என்ற கருத்தை இளங்கோவடிகள் சிறிதுமாற்றி

'முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்

வஞ்சினமாலை : 3—4

என்று கையாளுகின்றார்: சாத்தனாரும் இவ்வாறே கையாளுகின்றார். இது பழமொழியல்ல என்றும் சிலா கூறலாம். ஆனால் இது பழமொழியே என்பதற்குப் பழமொழி

முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும் (பழமொழி நானூறு)

இளங்கோவைவிடச் சிறிதே மாற்றியுள்ளார் முன்றுறை அரையர் என்பதைச் சற்றுக் கூர்ந்து நோக்குவோர் அறிந்து கொள்ளலாம். கொன்றை வேந்தன் இதனை இன்னும் சுருக்கி

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'

என்று சுட்டுகின்றது. வள்ளுவர் வாக்கே பிற்காலத்தில் பழமொழியாக மாறியிருக்கும் என்றும் சிலர் கூறலாம். ஆனால் வள்ளுவரின் குறள்கள் பழமொழியாக மாறியிருப்பின் அவரின் குறள்கள் எல்லாம் ஏன் மாறவில்லை என்றும் கேள்வி எழும். ஆதலின் முற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் வள்ளுவர் மக்கள் நாவில் தடம்பட்டுப் போன செவ்விய மொழியைக் கையாண்ட சான்றோர் என்றறியலாம்.

வள்ளுவர் மக்கள் வாழ்வில் கண்டவை, நுகர்ந்தவை, எண்ணியவை தம்மை இலக்கியப்படுத்துபவர் என்பதற்கு இன்னும் சில சான்றுகளைக் காணலாம்.

"கற்றலில் கேட்டலே நன்று" — பழமொழி நானூறு
"கற்றிலனாயினும் கேட்க" — குறள்
"மதிப்புறத்துப்பட்ட மறு" — பழமொழி நானூறு
"குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து" — குறள்
"யானையால் யானையாத்தற்று" — பழமொழி நானூறு
"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று" — குறள் 678

இவையெல்லாம் வள்ளுவர் பழமொழிகளைக் கையாண்டார் என்பதற்குச் சான்று.

வள்ளுவர் பழமொழிகளின் கருத்தைக் கையாண்டு மேலும் நயப்படுத்திக் கொள்ளும் சான்றோர் "எச்சிற்கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா" என்பது தமிழகத்து இன்றும் வழங்கும் பழமொழி. எச்சிற்கையால் காக்கை ஓட்டினால் கையில் ஒட்டியுள்ள சில சிறு பருக்கைகளும் சிதறிப்போகும். ஆதலின் அவன் வடிகட்டிய கஞ்சன் என்கிறோம். ஆனால் வள்ளுவர் உண்டு கையலம்பிய பின்னும் ஏதேனும் ஒட்டிக் கொண்டிருந்து அது சிதறி விழுந்து விடும் என்று கருதி ஈரக்கையையே உதற மாட்டான் என்கிறார். வள்ளுவர்

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு

என்பது அவர் வாக்கு

வாய்மொழி இலக்கியத்தில் சில வடிவக் கூறுகளையும் (formal features) நாம் காணலாம்

"உப்பைத்தொட்டு உரல் விழுங்குகிறது போல"

என்பது ஜான் வாசரஸ் என்பார் தொகுத்த ஒரு பழமொழி (1815). இப்பழமொழியில் "போல" என்பது ஓர் உவம உருபு. இவ்வுவம உருபு ஒரு வடிவக் கூருகும். பழமொழிகள் பல. பிறிதின் மொழிதலாகக் காணப்படுகின்றன ஆதலின் இவ்வுவமப் பழமொழிகளில் இக்காலத்துக் காணப்படும் வடிவக் கூறுபோல (formal feature) என்பதாகும் ஆனல் இவ்வடிவக் கூறு என்றும் ஒரே தன்மையில் இருந்ததாகத் தெரியவில்லை. திருநாவுக்கரசப் பெருமான் தம் பழமொழிப் பதிகத்தில் பல பழமொழிகளைத் கையாண்டுள்ளார்.

"இருட்டறையில் மலடுகறந் தெய்த வாறே"
"முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே".

இங்கு 'ஆறு' என்ற வடிவக் கூறைக் காண்கின்றோம். பழமொழி நானூறு ஆறு' என்ற வடிவக் கூறையே பயன்படுத்துகின்றது என்பதற்குக் கற்றெறுறுந்தான் கல்லாக வாறு" என்ற பழமொழி சான்ருகும். ஆனல் வள்ளுவர் அற்று, அற்ருல் என்ற வடிவக் கூறுகளைப் பயன்படுத்தியுள்ளார்

"கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"
"அறிதொறும் அறியாமை கண்டற்ருல்"

என்ற குறள்களில் வரும் பழமொழிகளில் வாய்மொழி வடிவக் கூறுகளைக் காணலாம்.

வள்ளுவரின் கருத்துக்கள் சில வடமொழியாளரிடம் காணப்படுகின்றன என்பதால் வள்ளுவர் வடமொழியாளரிடம் கடன் கொண்டார் என்று கூறமுடியுமா? இச் சிக்கலைத் தீர்க்க யாராவது உதவினல் நலம். தமிழ் மொழியில் காணப்படும் "விதையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா"? என்பது ஒரு பழமொழி Those who sow barley cannot reap wheat. (Arpa eken bugday bigmez) என்பது ஒரு துருக்கிப் பழமொழி. இது தமிழிலிருந்து துருக்கி மொழிக்குச் சென்றது என்றே அன்றித் துருக்கியிலிருந்து தமிழுக்கு வந்தது என்றே சொன்ஞல் அறிஞர் ஒப்பார். இப்படியிருக்க வள்ளுவர் கடன் வாங்கினர் என்போரும் வாங்கவில்லை என்போரும் இதற்கு என்ன வழிகாட்டுவர் என்று தெரிந்தால் நலம்.

'சிலப்பதிகாரக் கருத்தரங்கும் நூல் வெளியீட்டு விழாவும்'

டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம். ஏ., எம். ஓ. எல். பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம், அண்ணுமலைநகர்.

சிலப்பதிகாரம் என்ற காப்பியம் பற்றி 17, 18—11—1973 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் அண்ணுமலை நகரில், தமிழ்த் துறையாசிரியர் 7-ஆவது கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது. பலதுறையாசிரியர்களும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் 400 பேர்களும் விருந்தினர்களும் அரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தம் வரவேற்புரையில் பல்கலைக் கழகத்தின் முதன்மையான குறிக்கோள் ஆராய்ச்சி என்றும், ஆசிரியர்களுக்கேயன்றி மாணவர்களுக்கும் ஆராய்ச்சி மனப்பான்மை படிக்கும்போதே உடன் வளர வேண்டும் எனவும், தமிழ்த்துறையாசிரியர்கள் பாடஞ் சொல்லியதோடு அமையாது ஆராய்ச்சியும் உடன் செய்து வருகிருர்கள் என்பதற்கு இக்கருத்தரங்குகள் சான்றுகளாக உள்ளன எனவும், பல்கலைக் கழகத்து நிதி உதவியினுல் ஆய்வுக் கட்டுரைகள் இன்று நூல் உருப்பெற்றுள்ளன எனவும் கூறி, தமிழ் வளர்ச்சிக்கு என்றும் துணைசெய்து வரும் துணைவேந்தரின் தமிழ் நெஞ்சத்தைப் பாராட்டினுர்,

பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சா. ப. ஆதிநாராயணு விழாவிற்குத் தலைமை ஏற்றுத் தொடக்கவுரை நிகழ்த்துகையில் மாணவர்கள் நுட்பமாக வினுக்கள் கேட்பதையும் தமிழ்த்துறை புதியதோர் முறையில் தொடர்ந்து கருத்தரங்கு நடத்தி வருவதையும் பாராட்டி இவ்வாறு தொடர்ந்து நடக்கும் முயற்சியைப் பல்கலைக் கழகம் என்றும் ஆதரிக்கும் எனவும் கூறினுர். பின்னர் முந்திய கருத்தரங்குகளில் ஆய்ந்த சில கட்டுரைகள் அடங்கிய இலக்கணச் சிந்தனைகள், இலக்கியக்

சிந்தனைகள் இரு ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டார். பல்கலைக் கழக நூல் வெளியீட்டகப் பொறுப்பாளர் திரு ஆறு· அழகப்பன் நன்றி கூறினர்.

17—11—73 பிற்பகல் கருத்தரங்கு திருக்குறள் ஆராய்ச்சி விரிவுரையாளர் திரு, ச. தண்டபாணி தேசிகர் தலைமையில் நிகழ்ந்தது. திரு. ஆ. இராமசாமிப் பிள்ளை, 'சிலப்பதிகாரக் கதை' என்ற தம் கட்டுரையில் சிலப்பதிகாரக் கதைக்கும் பின்னர் தோன்றிய கண்ணகி வழக்குரை கோவிலன் கதை ஆகிய இரு நாட்டுக் கதைகளுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டினர். திரு. க தியாகராசன் 'சிலம்பில் பாண்டியன்' என்ற தம் கட்டுரையில் பல்லவ மன்னனின் சலிப்புணர்ச்சியால் நாவரசர் கொலைத் தண்டனை பெற்றது போன்று பாண்டியனின் சலிப்புணர்ச்சியால் கோவலனும் கொலைத் தண்டனை பெற்றான் என்பதைக் குறிப்பிட்டார் திரு. க. வெள்ளைவாரணன் 'சிலம்பில் சைவம்' என்ற தம் சமயக் கட்டுரையில் இக்காப்பியத்தில் காணப்பெறும் சிவ வழிபாட்டுச் சிறப்பியல்புகளையும், இறைவன் பெரியோன் உயர்ந்தோன் முதலிய சொற்களால் சிவபெருமான் இந்நூலுள் சிறந்து போற்றப் பெறுதலையும், சைவச் சொற்கள் சமணர்களால் மேற் கொள்ளப்பட்டதையும் புலப்படுத்தினர்.

18—11—73 முற்பகல் கருத்தரங்கிற்குத் துணைப் பேராசிரியர் திரு. க வெள்ளைவாரணன் தலைமை தாங்கினர். திரு. வெ பழநியப்பன் 'சிலம்பில் பாலைத்திணை' என்றதிணைக் கட்டுரையில் பாலைக்குக் கொற்றவையைத் தெய்வமாகக் கூறியதோடு வஞ்சிக்காண்டத்தில் பாலையையும் வாகையையும் இணைத்துப் பாடியுள்ளார் என்று காட்டினர். 'சிலம்பில் கவின் கலைகள்' என்ற கட்டுரை படித்த திரு. செ. வைத்தியலிங்கம் ஓவியம் சிற்பம் கூத்து குரவை முதலிய கலைபற்றிய நுண் குறிப்புக்கள் காப்பியம் முழுதும் மலிந்து கிடப்பதை வெளிப்படுத்தினர். 'சிலம்பில் சமணம்' என்று ஆய்வுரை வழங்கிய திரு. ச. தண்டபாணி தேசிகர் இக்காப்பியத்தில் சமணமே தாய்ச்சரக்கு என்றும் ஏனைச் சமயங்கள் துணைச்சரக்கு என்றும் சமயத் தத்துவங்கள் வரலாற்று ஓட்டத்தில் கலந்துள்ளன என்றும் மொழிந்

தார். திரு. கொ. இலக்குமணசாமி 'வரலாற்றுப் பின்னணி' என்ற கட்டுரைக்கண் சங்க கால வரலாற்றுக் கருத்துக்களைத் தழுவி இளங்கோ காப்பியம் செய்தார் என்றும் பண்டு வழங்கிய கதைக் கூறுகளை மூவர் காலத்தும் நிகழ்ந்தவை எனக் கற்பித்தார் என்றும் உண்மையான மன்னர் பெயர்கள் நூலகத்துக் காணப்படவில்லை என்றும் தம் கருத்துக்களை வெளியிட்டார். தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் தம் 'சிலம்பில் புதிய மொழிக் கூறுகள்' என்ற கட்டுரையில் ஆர் விகுதி, கின்று, உண்ணுதல், நான் என்ற புதுக்கூறுகள் சிலம்பில் புகுந்துள எனவும் இக்கூறுகள் வந்துள்ள எண் அளவைப் பார்க்குங்கால் இவை புதிய வரவின எனவும் இக்கூறுகள் மணிமேகலைக் காப்பியத்தும் காணப்படலால் மொழி காரணத்தாலும் இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என நிறுவலாம் எனவும், இக்காப்பியம் சங்கப் போக்குடையது ஆதலின் கி. பி. 3 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பிற்பட்டது ஆகாது எனவும் இதனைக் கால எல்லையாகக்கொண்டு சங்க நூல்களில் கி. மு. விற்கு முன்னர் வைத்துப் பார்க்க வேண்டும் எனவும் முடிவு கூறினார்.

பிற்பகல் கருத்தரங்கு தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமையில் நிகழ்ந்தது 'சிலம்பில் நெய்தல் திணை' என்னும் தம் திணைக் கட்டுரையில் திரு. ஆ. ஆனந்தநடராசன் கானல் வரிக் காதையுள் நெய்தல் திணைக் கூறுகள் நிரம்பவுள என்றும் நெய்தலின் புறமாகிய தும்பைத்திணை வஞ்சிக் காண்டத்துள் இடம் பெறுகிறது எனவும் தெரிவித்தார். டாக்டர் மு. கோவிந்தசாமி தன் 'சிலம்பில் வரலாற்றுச் செய்திகள்' என்ற கட்டுரையில் கண்ணகி கோவிலுக்கும் திரௌபதி அம்மன் கோவிலுக்கும் உரிய தொடர்புகளைச் சுட்டி மணிமேகலையில் அறவண அடிகள் வரலாறு சிலம்புக் காலத்தின் பின் எல்லையை வரையறுக்க ஒரு சான்றாகும் என்பதையும் எடுத்துரைத்தார். திரு. நா. இராசகோபாலன் 'காப்பிய அமைப்பு' என்ற கட்டுரையுள் சமயக் கருத்துக்கள் பலவற்றையும் குறைபாடின்றி இக் காப்பியம் காட்டுகின்றது எனவும் காப்பியத் தொடக்கமே தெய்வத்தன்மையோடு செல்கிறது எனவும் கூறினார் 'சிலம்பில்

வைணவம்' என்ற தம் சமயக் கட்டுரையில் திரு. பி. சீ. இராமாநுசாச்சாரியார் இன்று நாம் கொள்ளும் வைணவத் தத்துவக் கருத்துக்களுக்கு சிலம்பில் இடம் இல்லை எனவும் திருமாலை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் முறையே காணப்படுகிறது என்றும் செங்குட்டுவன் திருமால் சேடத்தைத் தோளில் புனைந்தது வெற்றிக் குறிப்பு என்றும் தெளிவு செய்தார். 'சிலம்பில் யாப்பமைதி' என்ற கட்டுரை வழங்கிய திரு. ந. வீ. செயராமன் முதற் காதையாகிய மங்கல வாழ்த்துப் பாடல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், இதன் இலக்கணம் தொல்காப்பியத்தில் இல்லை எனினும் பின்னைய இலக்கண நூல்களில் உண்டு எனக்கூறி இக்காதையை இன்னவாறு கலிப்பா உறுப்புக்களாகப் பகுத்துக் கொள்ளலாம் எனவும் எடுத்துரைத்தார். டாக்டர் சோ. ந. கந்தசாமி 'சிலம்பில் பௌத்தம்' என்ற சமயக் கட்டுரையில் எம் குலதெய்வப் பெயர் ஈங்கிடுக என்றதனால் கோவலன் பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் என்றும் சிலம்பில் இருவகைப் பௌத்தக் குறிப்புகளும் உள என்றும் சிலம்பின் இறுதியில் வரும் நீதிகள் புத்தப் பொன்மொழிகளின் தொகுப்பு என்றும் விளக்கினர்.

பார்வையாளராக வந்திருந்த இலக்கிய வரலாற்றுப் பேராசிரியர் திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணாசலம் சிவகதி என்ற சொல் சிலப்பதிகாரத்தில் முதற்கண் வந்து அருகனைக் குறிப்பதாக இருந்தாலும் வேதத்தில் இச்சொல் சிவனுக்கு உரியதாக முன்னரே காணப்படுகின்றது என்றும் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இசைக்கலையும் பிறவும் இழிவு பெற்று விட்டன ஆதலால் இக்கலைகளைப் போற்றும் சிலப்பதிகாரம் கி பி. 3 ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது எனவும் சில கருத்துக்களை எடுத்து விளக்கித் திரளாக மாணவர்கள் குழுமி ஆசிரியர்களோடு கலந்துரையாடும் இக்கருத்தரங்கு நல்ல அறிவுப்பணி நல்குவது என்று பாராட்டினர். திரு. வெ. செயராமன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

வானவெளிக் கற்பனையில்...

டாக்டர். சொ சிங்காரவேலன் எம் ஏ . பிஎச் டி..
(அ. வ. அ. கல்லூரி, மாயூரம்)

கதிரோன் மறைந்தபின்னர்க் கடமை தனைமுடித்து,
எதிராக மேசையிலே இருந்த பனுவல்களில்,
ஈடுபட்ட சிந்தை, இவ்வுலக வாழ்வுமுறை
பாடுபட்ட நெஞ்சம் பதைபதைப்புக் குள்ளாக,
மெல்ல நடந்தேன், மேன்மாடிப் படிக்கட்டில்,
மெல்ல நடந்தேறி மேலேநான் சென்றயர்ந்தேன்;
பொல்லா உலகத்தின் புகைச்சல் மனவறையின்
எல்லாப் பகுதிகளிலும் இருட்டடிப்புச் செய்ததுவே!
கண்வெளியைச் சற்றே கனிவாய் விரித்தபடி,
விண்வெளியைப் பார்த்தேன்; வியனுலகை நான்மறந்தேன்,

மண்வெளியில் மனிதஇனம் மனஅழுக்கைக் கண்டுநிதம்
விண்வெளிதான் வேர்த்ததுவோ? விண்மீன்கள் அத்துளியோ?
சமுதாயப் புன்மைகளைச் சாடுகின்ற சாட்டையடி,
அமுதாகும் அவ்வானில் அடிக்கடிநீள் மின்னலதோ?
தீமை உலகிடையே தெரிகின்ற நல்லோர்போல்,
ஊமை நெடுவானில் ஒளிவிரிக்கும் சிலவிண்மீன்!
மங்கலத் தமிழ்ப்பெண்கள். மாங்கலியம் போல், வானில்
திங்கட் பிறைக் கீற்றுத் தெரிகின்ற காட்சி யடா!
கட்சி அரசியலில் கண்ணிலே மண்தூவி
வெட்கமிலாப் போக்கில் வீணர்சிலர் குவிக்கின்ற

பணக்குப்பை தன்னைப் பாரிலே அறக்கடவுள்,
மணக்கின்ற வான்எல்லாம் மலர்ந்திடவே வீசியதோ!
சிதறிக் கிடக்கின்ற நெடுவானத் தாரகைகள்
உதறிக் கிடக்கின்ற உள்ளத்துக் கற்பனையை
ஓட்டிடவே யானும் உளமுருகக் கண்டிருந்தேன்!
நீதிக் கடவுள் நெடுவான வீதியிலே
போதிக்க வந்த உண்மையெனும் எழுத்துக்கள்
வரிவடிவத் தோடே வழங்கும் ஒளிவடிவ
அரிச்சுவடி நூலோ? அறிவுறுத்த வந்ததுவோ?
இயற்கைப் பெருந்தலைவன் இட்டதொரு சட்டத்தால்,

மயலாகிப் போன மண்ணரசி, தன்மீது
போட்டிருந்த முத்தாரம் அத்தனையும் விண்வெளியில்
காட்சிபெற வீசி விரித்த கடையதுவோ ?
கடலென்ற பெருந்தலைவன் காதலியாம் மண்ணரசி
உடல்தழுவ, முத்தெடுத்து ஒளிவானி லேவீசி
விரித்துவைத்த பட்டாடை வெளிப்படுத்தி வைத்தானோ?
சிரிக்கின்ற தாரகைகள் செம்பட்டுத் தாவணியோ ?
புத்தன்முதல் காந்திவரை புனிதர்பலர் அவதரித்துச்
சித்தந்தனைத் திருத்தும் திருப்பணிகள் செய்தபின்னும்,
உள்ளம் திருந்தாத ஒருகோடி மானிடரை,

எள்ளி நகைத்தே எழில்வானப் பேரரசி
முத்துப்பல் காட்டி முறுவலிக்கு காட்சியிதோ ?
நிலக்கரியைத் தங்கத்தை நெடுவயிரப் பெருமணியைத்
துலக்கமுற வெளிக்கொணரச் சுறுசுறுப்போடே மண்ணின்
ஆழம் கடந்து அப்பாலும் தோண்டுகின்ற
ஏழைக் குடிமக்கள், இரவினிலும் பகலிலும்
தொழிலகங்கள் எங்கும், தொழிலதனில் ஈடுபட்டும்
எழில்பொங்க வாழ்வோர் இருதயமே இல்லாமல்
கூலி கொடுக்கக் கைக் கூசுவதை, சமுதாய
வேலி தனைமதியா வேதனையைக் கண்டுவிட்டு

விண்வெளியின் நெற்றியிலே வியர்வைத் துளிகூடி
விண்பொலிய மின்னுவதோ விண்மீன் ஒளிச்சிதறல் ?
உலகங்கள் அனைத்திற்கும் ஒருதாயை, அகிலங்கள்
பலகண்ட நாயகியைப் படைப்புப் பெருஞ்சக்தி,
அன்னையைப் போற்றுதற்காய் அழகார்ந்த வானத்தே,
மின்னுருவப் பூக்கள் மிளிர்ந்திடவே தான்படைத்து,
வானத்துப் பெண்ணாள் வளர்க்கின்ற பூஞ்சோலை
வண்ணப்பூ வெல்லாம் வழங்கும் ஒளிப் பூவாக
மாறிவிட்ட பூங்காவோ மலர்வெள்ளத் தாரகைதாம் ?
ஓட்டிடவே யானும், உளம்பதைத்துக் கண்டிருந்தேன்;

வாட்டும் உலகியலோ, வனப்பில்லா வாழ்வியலோ,
நினைத்தால் குமட்டுகின்ற நிலைகெட்டார் சிலர்வாழ்வோ,
தினைத்துணையும் தோன்றாமல், தெய்விகக் கற்பனையில்,
என்னுள்ளே நானாய் இதழ்விரியும் பூமணமாய்
ஓர்லயத்தில் நானிருந்தேன்; ஒளிவானில் நான்மிதந்தேன்.

பளுவில்லாப் பஞ்சாகப் பறந்ததென்றன் மெல்லுடல்தான்.
குளுகுளென வானிலவுக் குளிர்ச்சி தழுவிடவும்,
பறந்தேன்; பலகாலம் பன்னீரில் ஊறியபின்
இறகெழுப்பி எழுகின்ற இன்குயிலின் ஓசையெனச்
செவிகளிலே ஓர்கீதம் சிவ்வெனவே பாய்ந்துவர.

புவியை மறந்தஎன்றன் புந்தியிலே தேன்பாய
என்னை மறந்தவ்வெளியில் எழுந்தகதை என்சொல்ல?
தன்னை மறந்தாகாயத் தண்வெளியில் கண்டதனைச்
சொல்லில் உரைத்தாலும் சுகங்கூடும்; ஆனாலும்
சொல்லில் வடிக்கவொணாச் சுந்தரத்தை என்சொல்ல?

வெளியில் கேட்ட கீதம்

"கோடானு கோடி ஆண்டுகளாய்த் தனிமையிலே
தேடாச் சுகந்தினைத்துத் தேனிசையில் நான்மிதந்தேன்.
கோடிக் கணக்கான காதத் தொலைவினிலே
ஆடி மிதக்கின்ற அற்புதமாம் பூவுலகத்
தேனிலவிற் பட்டுத் திளைத்திருந்த என்மேனி

மானிடரால் தீண்டா மகத்துவமே பெற்றதுவால்;
கதிரோனை யப்பால் கருதி அறியாத
புதிர்நிரம்பிக் கிடந்தவென்றன் போதை உளத்தினிலே,
"அப்போலோக்" கப்பல் அதிலேறி வந்திறங்கி,
ஒப்பில்லா விஞ்ஞான ஒருவினைவாய்த் தொட்டுவிட்டு,
கற்புக் கனலிறுகிக் கல்லாகிப் போனவென்றன்
கற்கள் தமையெடுத்துக் காதலுடன் கொண்டுசென்றான்
பூவுலக மாந்தன்! பொன்மேனி தனைத்தொட்டு
மேவுகின்ற என்உணர்ச்சி நரம்பின் பதிவுகளை
பொய்யுலக மாந்தன், புரட்டுக்கு மன்னன்.

மெய்யைப் பொய்யாக்கும் மேலான வித்தையிலே
தனக்கு நிகரில்லாத் தருக்குடைய ஒருவடிவம்:
வினைக்கு விளைவான உடலாலே வினைசெய்து
தன்னழிவுப் பாதைக்குத் தானே கால்கோள் செய்யும்
பின்னறிவில் லாத பெரியவன் என் மேனிதனைத்
தொட்டுவிட்ட பாவத்தைத் தொலைப்பது எப்படியோ?
விட்டுவிட்டுப் போனாலும் வெதும்பியெழும் என்மூச்சைக்
கண்டறிய அன்னான் கருவியொன்றும் வைத்துவிட்டான்;
விண்டுரைக்க மாட்டாத விதமாக என் உடலில்
தோன்றும் அதிர்வுகளை, தோன்றவிட்டுப் போய்விடவே

ஊன்றும் திறமதனை ஒப்புதல்நான் எப்படியோ?
பொல்லா மனிதப் புழுவிங்கே வந்துவிட்டு
நில்லா உலகிற்கு, நீளும் வெளியினிலே
கூடேறிப் போகும் கொடுமையினைப் பார்த்துவிட்டுச்
சூடேறிப் போனநான், துடித்தேன்; மனிதனவன்
காலிடறி என்மேல் தடுமாறினான்: ஆனால்,
மேலிடறி வீழ்ந்தென் மேனி தழுவாமற்
செய்தேன்; செருக்கடக்கி நிலைமறக்கச் செய்துவிட்டேன்!
கொய்தேன் அடையாகக் குளிருமென் மெல்லுடலைத்
தொட்டுவிட்டு வானத்தே தொலைந்துவிட்ட பாவத்தை

எப்படிநான் போக்கி இருந்திடுவேன்? பரம்பொருளின்
செப்படி வித்தையெனச் சேருகின்ற கோள்களிலே,
என்பெருமை, இவ்வாறு ஈடற்றுப் போயிடவோ?
என்னுரைப்பேன்; பரம்பொருளே!" என்றெழுந்த
வார்த்தைகளோ,
தெளிவாய் மிதந்துவந்தென் செவிகளிலே பாய்ந்திடலும்,
வெளியில் திங்களெனும் வித்தகஞ்சேர் பெண்குரலே
அன்னதென் றோர்ந்தேன்: அருகணையும் ஆவலுடன்,
நீல வெளியில் நெளியும் ஒளிக்கதிரைக்
காலுறவே பற்றிக் கரந்தழுவி மேலேறிச்
சென்றுவிட்டேன்; ஈதென்ன சோதனையோ? ஒளிநிலவு

வென்று விட்டதென்னை; விளையும் மனநினைவை!
வெளியில் மிதந்தேன் வெகுநேரம்; பின்னர்நான்
ஒளியில் நிறைந்த உலகிடையே வீழ்ந்துவிட்ட
அற்புதத்தை ஓர்ந்தேன்; ஆம்; அது ஓர் புத்துலகம்!
சொற்புகழ்ச்சிக் கெட்டாச் சுகஉலகம்! எனைமறந்தேன்!

(தொடரும்)

இயற்கைப் புலவர் கம்பர்

K. சோமசுந்தரம், B.A., B.L., தஞ்சை.

இயற்கையில் கைபுனைந்தியற்றாக் கவினழகு சொல்லற்கரிய வாறு தோய்ந்தும் நீக்கமற நிறைந்துமுள்ளது. அறிவூட்டும் ஆற்றலுடைய இயற்கையின் அழகின் பத்தினைக் கண்ட தமிழ்ச் சான்றோர், இயற்கையின் ஆட்சிக் கேற்பத் தம் வாழ்க்கை நிறையை உய்த்துணர்ந்து அமைத்துக்கொண்டனர். மற்றும் இயற்கையின் இயல்புக்கேற்ற உரிப்பொருள், கருப்பொருள், காலம் பொழுது முதலாயவற்றையும் செம்மைப் படவகுத்துக் கொண்டனர் ஆனல். இயற்கையின் எழில் நலங்கண்டு இன்புறும் தமிழ்ப் புலமை நலம் வாய்ந்த கம்பர். தம் காவியத்தில், இயற்கை வழங்கும் இன்பக் காட்சியினை, இயற்கையைப் படைத்த இறைவனை உணரும் தன்மையில் காண வைத்துள்ளார்.

இயற்கைப் படைப்பின் இன்றியமையாச் சிறப்பினவாகிய, வானத்தின் அழகும் ஞாயிற்றின் ஒளியும் திங்களின் நிலவும், கோள்களின் மின்னலும், மேகத்தின் வள்ளன்மையும். கரிய இருளின் காட்சியும் — இவையாவும் அண்டத்தின் அழியா அழகாக அமைந்து அருட்பணி புரிந்து வாழ்வை வளமாக்கும் உண்மையினைக் கம்பர் ஓர்ந்து, தன் கவிதையின் கண். அனுபவத்தின் வழி, அழகினில் உண்மை ஒளிர்வதையும், உண்மையில் அழகு மிளிர்வதையும் விளங்க வைத்தார். அண்டங்களில் ஐம்பெரும் பூதங்களின் இயக்கத்தால் பல்வகைப் பொருள்களும், அளவிலாத உயிரினங்களும் ஒருவித ஒழுங்கில் தோன்றவே. அவ்வியக்கத்தின் ஒலி நயத்தில், வாழ்வியல் எவ்வாறு அளவுடன் அமைந்துள்ள தென்பதைக் கம்பர்

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவுஎனப் பூதமைந்தும்
விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்

என குறிப்பாக உரைப்பாராயினர் ஐம்பெரும் பூதங்களின் இயக்கத்தை ஒரு வகையான ஒலி நய ஒழுங்கில் அமைத்து எல்லா அண்டங்களையும் சாட்டையிலாப் பம்பரங்கள் போல் இறை சுழலச் செய்து தானும் அழகுற இயங்குவதை கம்பர் தன்னுளே கண்டுகொண்டார். அழகு பொலியும் இயக்கத்தில், கம்பர் ஈடுபடுங்காலை எல்லையற்ற பேரின்பம் பெருகிடவே, அவரது மனம் உணர்ச்சிவகையால் உந்தப்பட்டு கற்பனையாற்

றலில் நிலைத்து உரங்கொண்டது இதனைக் கொண்டு, உலகம் அழகின் உறு துணையால் அமைவுற வளர்வதையும் உணர்ந்தார். உணரவே, கம்பர் கற்பனையிற் கண்டிடும் கலையதனல் அழகானவற்றை எல்லையற்ற இன்பத்தோடும் மகிழ்வோடும் பாக்களில் படைத்து. வாழவுதவும் பண்பாட்டுணர்ச்சிகளை வழங்கினர் இவ்வாறு வழங்குங் காலையிலும், கம்பர். கற்பனைகள் யாவும் உண்மையில் வாழ்வியலை யொட்டி யுள்ளன எனக் கொண்டு. இயற்கையைத் தான் கண்டவாறு சிறப்பித்தும், எடுத்துக்கொண்ட பொருளை இயற்கைக்கு முரணுகாமல் கூறியும், தம் மனேபாவத்திற் கியைந்த உவமைகளையும் எடுத்தாண்டும் வந்தார்.

வாழ்க்கை நிகழ்ச்சிகளின் கண்காணும் காட்சி நலத்துடன் கற்பனையும் பெற்ற கம்பர், கடவுளாகப் போற்றிக் கருதப்படும் கதிரவனை எத்தகைய கோணங்களில் தம் அறிவுக் கதிர்வழி கண்டு மகிழ்ந்து காவியத்திற்கு அழகூட்டுகிருரென்பதைக் காண்குவம். அவ்வாறு காணுங்கால், காவியத்தைப் பகுத்தறிவு கண்ணேட்டத்துடன் கற்காது இதயத்தைக் கொண்டு கற்றல் இன்றியமையாதது. காலைக் கதிரவனைக் கண்ட கம்பர், அதன் அழகில் ஈடுபட்டு இன்புற்று அதனுல் தன் மனத்தில் எழுந்த எண்ணங்கள், அனுபவம், உணர்ச்சி ஆகியவற்றை கற்பனை நயமுடன் கலந்து. சொற்களால் மெய்ப் பாட்டுணர்ச்சியும் தோன்ற, கதிரவன் எழும் எழிலுக்கு மேலும் அழிகினையூட்டி நல்லின்பம் நல்குகிருர்.

உயிரினங்கள் உள்ளத்தில் உவகை பொங்க கதிரவன் கீழ்வானம் சிவக்கும்படி செங்கதிர்களைப் பரப்பி எழுங்காலை, புள்ளினங்கள் இசைபாட. பொய்கைத் தாமரை மலர்களை இதழ் விரித்து வரவேற்பது இயல்பு. அவ்வரவேற்பு எதைப்போன்றிருந்ததென்பதை ஓர் அழகிய உவமை வாயிலாக கம்பர் விளக்குகின்ருர். தலைவன் தான் கூறிய திரும்புங் காலங்கண்டு வரவு நோக்கிக் காத்திருக்கும் தலைவி. பிரிவாற்ருமையால் உளத் தளர்ச்சியும் உடல் மெலிவும் நீங்கத் தலைவனைக் கண்டு மகிழும் கற்புடைய மகளிரே போன்று தாமரை மலர்களும் (தலைவி) கதிரவனைக் கண்டதும் (தலைவன்) அகமும் முகமும் மலர பொய்கைகள் பொலிவுற்றன.

(தொடரும்)